# DEPOSITION OF WITNESS

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 35/2020 |
| Name | : Babu |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.12.2024

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது. 2ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணாபுரத்தில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை செய்கிறேன். நான் மடத்துக்குளம் நால் ரோட்டில் ஸ்டாண்டில் வாகனம் வைத்துள்ளேன். கடந்த 05.05.2019ம் தேதி மாலை 04.00 மணியளவில் துரைபாண்டி, பிரகாஷ்மற்றும் நான்கு நபர்கள் சேர்ந்து பாரத் பெட்ரோல் பங்க் அருகில் மது அருந்திக்கொண்டு தாகாத வார்த்தையால் பேசிக்கொண்டு சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். என்னுடைய வண்டி பக்கத்தில் நிறுத்தியிருந்ததால் அவர்கள் துக்கி எறிந்த கல் என் வண்டியின் மீது மோதியது அது குறித்து நான் கேட்டதால் என்னை தாயோழி, தேவடியா மகனே என்று துரைபாண்டி மற்றும் பிரகாஷ் ஆகியோர்கள் சொல்லி திட்டி என்னை கல்லால் எனது தலையில், கண்ணிற்கு அருகில், கை கால்களில் நான்கு பேரும் சேர்ந்து அடித்தார்கள். நான் ஆம்புலன்ஸ் மூலம் உடுமலை கோகுல் பாலி கிளினிக்கில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். அங்கு 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். அப்போது மடத்துக்குளம்

போலீசார் வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். மேற்படி வழக்கில் எதிரிகள் முன் பிணை பெற்றார்கள். மீண்டும் 30.05.2019 ம் தேதி இரவு 08–09 மணி அளவில் நான் மடத்துக்குளம் பெட்ரோல் பங்க் டெம்போ ஸ்டாண்ட் அருகே எனது வண்டியுடன் நின்று கொண்டிருந்த போது எதிரிகள் துரைபாண்டி மற்றும் பிரகாஷ் ஆகியோர் மது போதையில் வந்து நீ கேஸ் கொடுத்து புடுங்கிட்டியா என்று கேட்டு என்னை தாயோழி மகனே, தேவடியா மகனே என்று கெட்ட வார்த்தையால் திட்டியும், மேலும் சாட்சி சொன்னால் அரிவாளால் வெட்டுவேன் என்றும் சாட்சி சொல்பவர்களையும் வெட்டுவேன் என்று சொல்லி என்னை பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள். அப்போது ஸ்டாண்டில் நாகராஜ் மற்றும் செந்தில்குமார் ஆகியோர்கள் இருந்தார்கள். இது சம்மந்தமாக மறு நாள் காலை மடத்துக்குளம் காவல் நிலையத்தில் எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.12.19 12:25:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 35/2020 |
| Name | : Senthilkumar |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.12.2024

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது. 2ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கு நீலம்பூரில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை செய்கிறேன். 30.05.2019ம் தேதி இரவு 09.00 மணிக்கு நான், அ.சா.1 பாபு, நாகராஜ் ஆகியோர்கள் மடத்துக்குளம் பெட்ரோல் பங்க் அருகில் உள்ள டெம்போ ஸ்டாண்டில் பேசிக்கொண்டிருந்த போது சுமார் 4-5 நபர்கள் வந்து அ.சா.1 பாபுவைப் பார்த்து தாயோழி மகனே, தேவடியா மகனே என்று சொல்லி தகாத வார்த்தையால் பேசினார்கள் மேலும் நீ கேஸ் கொடுத்து என்ன பண்ணப் போறே பார்த்துக்கலாம் என்று பயங்கரமாக மிரட்டினார்கள். நாங்கள் அ.சா.1 யை ஏற்கனவே கேஸ் கொடுத்திருக்கியில்ல என்று சொல்லி அவரை ஆறுதல்படுத்து அந்த இடத்தில் இருந்து அ.சா.1 யை வேறு இடத்திற்கு கூட்டிச் சென்றோம். அப்போது எதிரிகள் யார் ? சாட்சி சொல்லப் போனாலும் அவர்களையும் வெட்டுவோம் என்று சொல்லி மிரட்டல் விடுத்தார்கள். மேற்படி நபர்களின் பெயர் விசாரித்த

போது பிரகாஷ் என்று சொன்னார்கள். மற்றொருவர் பெயர் துரைபாண்டி என்றும் தெரிய வந்தது. இது சம்மந்தமாக அ.சா.1 உடன் சென்று எழுத்து மூலமாக புகார் கொடுத்தோம். இது சம்மந்தமாக போலீசார் எங்களை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.12.19 12:25:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 35/2020 |
| Name | : Nagaraj |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.12.2024

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது. 2ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது மடத்துக்குளதில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை செய்கிறேன். 30.09.2019ம் தேதி இரவு 08.00– 09.00 மணியளவில் நான், அ.சா.1 பாபு, செந்தில்குமார் ஆகியோர்கள் மடத்துக்குளம் பெட்ரோல் பங்க் அருகில் உள்ள டெம்போ ஸ்டாண்டில் டெம்போக்குள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த போது 2 நபர்கள் வந்து அ.சா.1 பாபுவைப் பார்த்து கேஸ் கொடுத்து பாருடா உன்னால முடிந்ததை பாருடான என்று சொல்லி கேனப்புண்ட, தாயோழி என்று சொல்லி தகாத வார்த்தையால் பேசினார்கள் உன்னால முடிஞ்சதை பாருடா என்று சொன்னார்கள். நாங்கள் அ.சா.1 யை ஏற்கனவே கேஸ் கொடுத்திருக்கியில்ல என்று சொல்லி அவரை ஆறுதல்படுத்து அந்த இடத்தில் இருந்து அ.சா.1 யை வேறு இடத்திற்கு கூட்டிச் சென்றோம். இது சம்மந்தமாக அ.சா.1 உடன் சென்று எழுத்து மூலமாக புகார் கொடுத்தோம். இது சம்மந்தமாக போலீசார்

எங்களை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.12.19 12:25:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்